BTA
BERGEN TAMILSK AVIS
44
August 2025

# தேன்தமிழிதழ்

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)

## நெய்தல் சிறப்பிதழ்



# வணக்கம்.



எதிர்வரும் 2025 செப்டெம்பர் 8ம் நாளன்று நோர்வேயின் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறவிருக்கிறது. 19 மாவட்டங்களிலிருந்து 169 பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். தேர்தல் ஆண்டின் இறுதிக்குள் 18 வயது நிரம்பிய நோர்வே குடிமக்களாக இருப்பவர்கள் நாடாளுமன்ற தேர்தலில் வாக்களிக்கலாம். ஜனநாயக முறைமையில் ஆர்ப்பாட்டமின்றி, நாகரிகமாக, மிகவும் அமைதியாக நடைபெறும் நோர்வேயின் தேர்தலில் வாக்குரிமை பெற்ற வாக்காளர்கள் அனைவரும் வாக்குரிமைகளை பயன்படுத்த வேண்டியது மிக முக்கியமான பொறுப்பாகும்.

ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கும் 19 தொகுதிகளில் (மாவட்டங்களில்) விகிதாசார பிரதிநிதித்துவத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் 20 அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன.

நோர்வே நாட்டை சகல வழிகளிலும், சகல துறைகளிலும் நிர்வகிக்கவல்ல சிறந்த அரசியல் குழுவினை தேர்வு செய்யும் தேர்தல் இதுவாகும். பொறுப்புள்ள தலைவர்களை தேர்வு செய்யும் பொறுப்பு மக்களினது கைகளிலேயே உள்ளது. அனைத்து அரசியற் கட்சிகளும் தமது கொள்கைகளை, நோக்கங்களை வெளிப்படுத்தி வருகின்றனர். அவற்றினை நோர்வேஜிய செய்திகளின் ஊடாக அறிந்து கொள்ளுங்கள். கட்சிகளின் கொள்கைகளை அறிந்து, உங்களுக்கு பிடித்த ஏதோ ஒரு கட்சிக்கு வாக்களியுங்கள்.

உள் நாட்டினை திறம்பட நிர்வகிப்பதற்கு அப்பால், தற்கால நிலையில் ஐரோப்பாவிலேயே நாட்டுக்கு நாடு பெரும் யுத்தங்களும், அழிவுகளும், அகதி வாழ்வுமாக மக்கள் அங்கலாய்த்து ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இதற்குள் மக்களின் அழிவுகள் பற்றிய சிந்தனையற்றவர்களாக வல்லரசுகள் தமது ஆயுத பலத்தையும், அதிகாரங்களையும் உலகுக்குக் காட்ட மிகவும் மோசமான மனிதாபமற்ற தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள். இந்த யுத்த காலகட்டத்திலே, நாடுகளுக்கிடையிலான அணு ஆயுத பலப்பரீட்சை நடைபெற்றுவரும் நிலையில், நோர்வேயின் நிலைப்பாடுகள் என்ன? நோர்வே அரசு எவ்வாறான தீர்மானங்களை எடுத்து வருகின்றது? எடுக்கப்போகின்றது? என்பது மக்கள் தெரிவுசெய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களிலேயே தங்கியுள்ளது. எனவே வாக்குரிமையுள்ள குடிமக்களது தெரிவு அதிமுக்கியமானது என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும்.

புலம் பெயர்ந்து வந்து இந்நாட்டில் வாழும் நமது மக்கள் ஏராளமானவர்களுக்கும் வாக்குரிமை உண்டு. இந்நாட்டினை சிறந்த முறைகளில் நிர்வகிக்க வல்ல தலைவர்களை தேர்வு செய்யும் பொறுப்பு வாக்குரிமை பெற்ற நமது கைகளிலும் உண்டு. நமக்கு வாழிடம் தந்த இந்த நாட்டில் நாமும் அக்கறையுள்ளவர்களாய் இருக்கிறோம் என்பதை வெளிப்படுத்த இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.
எனவே நமது வாக்குரிமைகளைப் பயன்படுத்தி நோர்வே நாட்டை சிறப்புற நிர்வகிக்கவல்ல அரசியல் தலைவர்களை தேர்ந்தெடுப்போம்.

தேன் தமிழிதழ்
Ansvarlig redaktør: Julius Antoni
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி
தொலைபேசி எண்: (47) 924 63 674
Vipps 729129, Eller bank konto: 3626 31 78585

BTA
BERGEN TAMILSK AVIS

# வாய்ப்பு

**ஜமீல்**

அது எதுவாக இருந்தாலும்
எல்லாவற்றுக்கும் நீதமாகவே
நேரங்களை பகிர்ந்தளிக்கிறது காலம்

இதில் ஊழல் புரியவோ
பதுக்கல் செய்யவோ
காலம் அற்பப் பதரா என்ன

நேரத்தின் வல்லமை புரிந்தவர்கள்
அழகான ஓவியம்போல்
வாழ்வை வரைந்து கொண்டனர்

சிலர் இனிமை மிகுந்த
பாடலென யாத்து
மெய் மறந்து ரசித்து திழைத்தனர்

வேறு சிலர் அலட்சியமாக கையாண்டு
ஆலிசம் புரிந்து விட்டு
காலத்தை விமர்சிக்கலாயினர்

நேரங்களை தவற விடுபவன்
ஒளி மயமான கனவுகளை
தவற விடுகிறான்
அடைய நினைத்த இலக்கை
தவற விடுகிறான்
அவாவுறும் வாழ்வின் இருப்பை தவற விடுகிறான்
ஒரு கட்டத்தில்
அவனை அவனே தவற விடுகிறான்

நேரமென்பது வாய்ப்பே தவிர
அது உத்தரவாதமில்லை
அதனை கைவிடுபவர்களை
காலமும் கை விடுகிறது
O

# நோர்வே விடுதலைப் போரில் பெண்கள்

## Eva Kløvstad Jørgensen



Eva Jørgensen (senere Kløvstad) var den faktiske lederen for Milorg i Hamar-distriktet mot slutten av krigen. Foto tatt kort tid etter frigjøringa. Milorg Hamar

இரண்டாம் உலகப் போரின் போது, நோர்வே பெண்கள் பலர் தங்கள் தாயக விடுதலைக்கு தம்மாலான பங்களிப்பை நல்கியுள்ளனர். ஆயினும் அவர்களது ஒப்பற்ற தியாகங்கள் இந்நாட்டில் ஆவணப் படுத்தப்படவில்லை. அவர்களுக்கான அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை, மதிப்பு அளிக்கப்படவில்லை. இவை தொடர்பான கருத்துப் பகிர்வுகள் தற்காலத்தில் வெளியாகி வருகின்றன.
இவ்விடயம் தொடர்பாக கடந்த இதழிலும் நாம் குறிப்பிட்டிருந்தோம்.

இரண்டாம் உலகப்போரின் போது ஏராளமான பெண்கள் உளவுத்துறையாளர்களாக, எல்லைக் காவலர்களாக, தகவல் பரப்பினர்களாக, செய்தித்தாள் தயாரிப்பாளர்களாக, இன்னும் பலர் இராணுவ பயிற்சி பெற்று போராட்டத்தியிலும் ஈடுபட்டு தமது நாட்டின் விடுதலைக்குப்பங்காற்றியுள்ளனர்.



நோர்வே நாட்டின் விடுதலைக்காக உயிரைக் கொடுத்துப் போராடிய போராளிகளுள் Eva Kløvstad Jørgensen என்ற பெண் போராளி குறிப்பிடத் தக்கவர். மையப்

போராளிகளுக்குள் ஒருவர் எனவும் இவரை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.
Hedmarkenஇலுள்ள Vang எனுமிடத்தில் 1921 யூன் 10ம் நாளன்று பிறந்தவர். பாடசாலையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்ற நாளிலிருந்தே தாயக விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்தவர்.

Hamar என்னும் ஒரு நகர சபையில் ஒரு சிறந்த போராளியாக திகழ்ந்தவர்.

1944 இலையுதிர்காலத்தில் Hamarஇன் Milorg D25 என்ற அமைப்பினது தலைவர் சுடப்பட்டார். Milorg D-25 என்ற அமைப்பு நோர்வே நாட்டின் விடுதலை அமைப்பாக செயல்பட்ட இயக்கம் என்றும் கூறலாம்.

இவ்வியக்கம் Hamar மாவட்டத்தில் இயங்கி வந்தது. அங்குதான் அதனது தலைவர் சுடப்பட்டார். அவ்வேளை Eva Kløvstad Jørgensen என்ற பெண் போராளி "ஜேக்கப்" என்ற குறியீட்டுப் பெயரில் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

அவர் Hedmarken என்னுமிடத்தில் அடக்கு முறையாளர்களுக்கு எதிரான பணிகளை மறுசீரமைத்தார். 1200 ஆண்களுக்குப் பொறுப்பான பகுதியில் ஒரு புதிய வலையமைப்பை உருவாக்கினார். 1945 மே 9ம் நாளன்று அவர் Hamarஇல் Millor சிகரங்களில் அணிவகுத்துச் சென்றார். தனது ஆற்றலையும் திறமைகளையும் மட்டுமல்லாது தனது உயிரையும் நாட்டுக்காக கொடுக்க தயாராகி போராட்டத்தில் இணைந்து போராடியவர்.

**ஆனால் நாடு விடுதலையாகிய பின்னர், 1945ம் ஆண்டு யூன் 9ம் நாளன்று ஒஸ்லோவில் நோர்வே நாட்டின் விடுதலைப் போராளிகளுக்கும், அதற்காய் பாடுபட்டவர்களுக்கும் நோர்வே அரசினால் சிறப்பு மரியாதை செலுத்தப்பட்டது. Eva Kløvstad Jørgensen என்ற பெண் போராளி இந்நிகழ்வுக்கு அழைக்கப்படவில்லை.**

அதேவேளை Eva Kløvstad Jørgensen தன்னைப் போல் பல பெண்கள் நாட்டுக்காக தம்மை ஏதோவொரு வகையில் அர்ப்பணித்து உள்ளார்கள். அவர்களின் தியாகம் மதிப்பளிக்கப் படவில்லை என்பதிலும் கவலை கொண்டிருந்தார். இருந்தாலும் அவர் ஒஸ்லோ நகருக்குச் சென்று அந்நிகழ்வைப் பார்வையிடுள்ளார்.




அங்கு வேறு சில பெண்கள் அரசரின் முன் அணிவகுப்பில் பங்கு கொண்டதை பார்த்ததும், தனக்கு எதற்காக அந்த அழைப்பு கிடைக்கவில்லை என தான் கவலை கொண்டதாகவும், அது ஒரு கசப்பான அனுபவமாக தன்னை பாதித்தது எனவும் ஒரு பத்திரிகை நேர்காணலில் Eva Kløvstad பகிர்ந்து கொண்டார்.

1980களில் தான் Eva Kløvstad தனது போர்க்கால அனுபவங்களைப் பற்றி பகிரங்கமாகப் பேசினார். மேலும் அவரது பதிவுகள் நோர்வே வரலாற்றில் பெண்கள் ஒரு முக்கிய பங்காளிகள் என்பதனை ஆணித்தரமாக பதிவு செய்தார்.

1947இல் அவர் Tor Kløvstad என்பவரை மணம் முடித்து வாழ்ந்து வந்தார். Eva Kløvstad பல ஆண்டுகளுக்கு பின்னரும் இரண்டாம் உலகப் போரின் போது போராட்டத்தில் ஈடுபட்டு கௌரவிக்கப்படாத பல பெண்களை இணைத்து, தனியாக அவர்களுக்கு மதிப்பளித்து வந்துள்ளார்.

2014 யூன் 8ம் நாளன்று அவரது ஊராகிய Hamar எனுமிடத்தில் மரணித்தார்.

2015ம் ஆண்டில், துறைமுகப் பகுதியை மறுசீரமைப்பது தொடர்பாக, ஒஸ்லோவில் உள்ள Filipstadஇல் ஒரு வீதிக்கு அவரது பெயரை வைக்க முன்மொழியப்பட்டது. Eva Jørgensen என்ற இயற்பெயர் அவருக்கு இருந்ததால், அதைப் பயன்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.






**-Mhmd Nawshad-**

மலையாளத் திரைப்படத் துறையில் புகழ்பெற்ற இந்திய நடிகர், திரைக்கதை எழுத்தாளர், இயக்குனர் மற்றும் தயாரிப்பாளர் சிறீனிவாசன். ஏப்ரல் 6, 1956 அன்று கேரளாவின் தலசேரியில் பிறந்தார். தனது கூர்மையான அறிவு, சமூக ரீதியாக பொருத்தமான கருப்பொருள்கள் மற்றும் நுட்பமான நகைச்சுவையுடன் கூடிய திரைக்கதைக்காகவும் நடிப்புக்காகவும் இவர் இன்றுவரை கொண்டாடப் படுகின்றார். 1970களின் பிற்பகுதியில் தனது நாடகத் துறை மூலம் கலை வாழ்க்கையைத் தொடங்கிய ஸ்ரீனிவாசன், சந்தேசம், சிந்தாவிஷ்டாய சியாமளா, மற்றும் வடக்கு நோக்கியந்திரம் போன்ற படங்களில் நடித்ததற்காக மட்டுமல்லாமல், அரசியல், ஊடகம் மற்றும் சமூகப் பிரச்சினைகளை பெரும்பாலும் நையாண்டி செய்யும் அவரது திரைக்கதை எழுத்துக்காகவும் பிரபலமானார். பல தசாப்தங்களாக, மலையாளத் திரைப்பட உலகில் இவர் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறார்.

சினிமாவில் மட்டுமல்ல பொது வாழ்விலும் வெளிப்படையாகவும் உண்மையாகவும் பேசக்கூடியவர். சுகவீனம் காரணமாக சினிமாவை விட்டு ஒதுங்கியிருந்தாலும் மலயாள சினிமாவில் இவரது இடம் இன்னும் யாராலும் நிரப்பப்படவில்லை.

நடிப்புப் பயிற்சிக்காக Madras film chamberஇல் இணைந்திருந்த காலத்தில் தான் சூப்பர்ஸ்டார் ரஜினி இவருக்கு அறிமுகமாகியிருக்கிறார். சிறிது காலத்துக்கு முன் ஒரு மலையாள ஊடகத்துக்கு இவர் வழங்கிய பேட்டியில் சூப்பர் ஸ்டார் ரஜினி சம்பந்தமான இதுவரை எந்த ஊடகத்திலும் வராத சில சுவையான விடயங்களை இவர் பகிர்ந்து கொண்டார். தேன் தமிழிதழ் வாசகர்களுக்காக அந்தப் பேட்டியின் தமிழ் மொழிபெயர்ப்பே இது.






நான் பிலிம் சேம்பரில் பயிலும் போது ரஜினி எனக்கு ஒரு வருடம் சீனியர். எனக்கும் அவருக்குமான உறவே ஒரு பாராட்டில் தான் ஆரம்பித்தது. அப்போதெல்லாம் நடிப்பு பயிற்சி நேரத்தில் எமது திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் எங்களுக்கு எடுக்கும் ஸ்க்ரீன் டெஸ்ட் காட்சிகளை எங்களுக்கே திரையிட்டுக் காட்டுவார்கள். அப்படியொருநாள் நான் நடித்த ஒரு காட்சியை பார்த்துவிட்டு முதன்முதலில் என்னைத் தேடி வந்து பாராட்டியதில் தொடங்கியது எனக்கும் ரஜினிக்குமான நட்பு.

ரஜனியைப் பற்றி நான் தினமும் ஆர்வத்தோடு உற்று அவதானிக்க சில காரணங்கள் இருந்தன. ரஜினி எப்போது மணியோடர் வந்தாலும் தபால்கரனை யாருமில்லாத இடத்துக்கு கூட்டிப்போய் ரகசியமாகத் தான் பணத்தை பெற்றுக்கொள்வார். காரணம் மாதாமாதம் 1ரூபாய் 2ரூபாய்களாக நண்பர்கள் மூலம் கிடைக்கும் பணத்தில் தான் ரஜினியின் செலவு ஓடிக் கொண்டிருந்தது. இதை யாரும் கண்டு கேலி செய்துவிடக் கூடாதென்று மிகவும் கவனமாக இருந்தார். நானும் தெரியாதது போல் இருந்து விட்டேன். எம் சக மாணவனொருவர் ரஜினியிடம் ஐந்து ரூபாய் கடன் வாங்கிவிட்டுத் திருப்பி கொடுக்காமல் ரஜினியின் கண்ணில் படாது நகர்ந்து கொண்டிருந்தார் (இப்போது அவரொரு பிரபலம்). ரஜினி என்னிடம் வந்து நிலமையைச் சொல்லி பணத்தை எப்படியாவது வாங்கித்தரச் சொன்னார். நானும் அதை ஒரு சாகசமாகச் செய்து கொடுத்தேன்.

என்னை விடவும் தேவனுடன் ரஜினி நெருங்கி பழகினார். இவ்வளவு கஷ்டப்படுற ஒருத்தர் எதுக்காக தொழில் செய்யாமல் நடிகனாக ஆசைப்பட்டாரென்று ஒரு கேள்வி எனக்கிருந்தது. ஆனால் ரஜினியிடம் அதையெல்லாம் நேரடியாக என்னால் கேட்க சங்கடமாக இருந்தது.
ஒரு நாள் தேவனிடம் கதையை போட்டு ரஜினியின் சரித்திரத்தையே வாங்கிக்கொண்டேன்.
“அத சொல்லணும்னா ரஜினியின் காதலையும் சொல்லணும்” ஆம் ரஜினி பஸ் நடத்துனராக இருந்தபோது பஸ்பயணியாக வந்த பெயரறியாத அந்த தேவதையுடன் சண்டையில் தொடங்கி சமரசமாகி பின்பு காதலும் மலர்ந்தது.

ஒருநாள் தன் காதலியை தான் நடிக்கும் நாடகத்தைக் காண அழைத்திருந்தார் ரஜினி. ரஜினியின் நடிப்பை பார்த்த அவளுக்கோ ஆச்சரியம். மற்றொரு நாள் “மெட்ராஸ் பிலிம் சேம்பரின்” நடிப்புப்பட்டறை சமபந்தமான ஒரு விளம்பரத்தை எங்கோ பார்த்த காதலி ரஜினிக்குள் சினிமாக் கனவை விதைக்க முனைந்தாள். ஆனால் ரஜினியோ தனது வறுமையைக் காரணம் சொல்லி மறுத்துவிட்டார்.

ஆனால் காதலி விடவில்லை ரஜினிக்கான செலவுகளை தான் பொறுப்பேற்றுக் கொண்டு, அவரின் திரைப் பயணத்துக்கு ஆரம்பப்புள்ளி இட்டாள். சிலமாதங்கள் கடந்த நிலையில் திடீரெனக் காதலியிடமிருந்து எந்த தகவலும் இல்லை மணி-யோடரும் இல்லை.


நண்பர்கள் பணம் அனுப்பத் தொடங்கியது அதன் பின்னராக இருக்க வேண்டும். ஆனாலும் அப்போதும் தான் வாழ்வதே தன் காதலியை எப்போதாவது சந்திப்பேன் என்ற நம்பிக்கையில் தான் என தேவனிடம் சொல்லியழுதிருக்கிறார் சூப்பர்ஸ்டார்.



ரஜினி காதலியை சந்தித்தாரா சந்தித்திருந்தால் அவரின் வாழ்க்கையை மாற்றியமைத்த அந்த "தேவதை" யார்? அவர்தான் சொல்லனும்.

இன்னமும் "சிவாஜி ராவ்" சூப்பர்ஸ்டாராக மாற முதற்காரணமாக இருந்த அந்த தேவதையை சந்தித்தாரா? இல்லையா? என்ற கேள்விக்கான விடை கிடைக்கவில்லை. சிலவேளை இனி அப்படியொரு சந்திப்பு வேண்டாமென ரஜினியே அதை தவிர்த்திருக்கலாம். எங்கிருந்தாலும் வாழ்க!

**மெட்ராஸ் ஃபிலிம் சேம்பர் மூட ரஜினி தான் காரணமா?!**



அப்போதெல்லாம் தென்னிந்தியாவின் நான்கு மொழிகளுக்கும் பொதுவாக ஒரேஒரு film instituteதான் இருந்தது. தென்னிந்திய இயக்குனர்களினதும் தயாரிப்பாளர்களினதும் பங்களிப்பில் சினிமாக் கலைஞர்களை உருவாக்கவென ஆரம்பிக்கப்பட்டது தான் MADRAS FILM CHAMBER.

அதில் இரண்டுவருடப் பயிற்சியை முடித்துக்கொண்டு "சிவாஜிராவ்" வெளியேறி வாய்ப்புக்காக அலைந்து திரிந்தார். பயிற்சிக் காலங்களில் என்னுடைய சீனியர் யாரும் என்னை பாராட்டியதே இல்லை. முதன்முதலில் ஆத்மார்த்தமாய் பாராட்டிய என்னுடைய சீனியர் என்ற வகையில் அவருடன் எனக்கு நட்பையும் தாண்டிய ஒரு ஈடுபாடு இருந்தது. அதனாலோ என்னவோ அவரின் நலன் விரும்பியாக அவ்வப்போது அவரைப்பற்றி நண்பர்களிடம் கேட்டறிந்து கொள்வேன்.

ஃபிலிம் சேம்பரின் உறுப்பினர்களாக இருந்த எல்லா இயக்குனர்கள் மற்றும் தயாரிப்பாளர்களிடமும் வாய்ப்புக்காகத் தேடிப்போன "சிவாஜி ராவுக்கு" யாருமே வாய்ப்புக் கொடுக்கவில்லை. இறுதியில் இயக்குனர் K.பாலச்சந்தர் அவர்களின் படத்தில் வாய்ப்புக் கிடைத்ததாக அறிந்தேன். வெறும் ஆறே மாதங்களில் அவருக்கு அடுத்தடுத்து வாய்ப்புக்கள் ஏற்பட்டு, குறுகிய காலத்தில் நட்சத்திர அந்தஸ்த்தை எட்டிப்பிடித்தார் "ரஜினி காந்த்".

வாழ்க்கை ஒருவட்டமல்லவா...?! அன்று "ரஜினி"ஐ அலட்சியம் செய்த ஃபிலிம் சேம்பரின் இயக்குனர்களும் தயாரிப்பாளர்களும் ரஜினியின் கால்ஷீட்டுக்காக அவரின் பின்னால் அலைந்தார்கள். ஆனால் கடைசிவரையில் ரஜினி அவர்களைக் கண்டு கொள்ளவேயில்லை. காலம் காத்திருக்காதல்லவா....? இனியும் ரஜினி போன்ற கலைஞர்களை உருவாக்குவதால் ஃபிலிம் சேம்பருக்கு பயனில்லையென ஃபிலிம் சேம்பர் கலைக்கப்பட்டது. வெறும் ஆறே ஆண்டுகள் தான் அதன் ஆயுள் என்றாலும் அதில் உருவாக்கப்பட்ட கலைஞர்கள் ஏராளம்.

மெட்ராஸ் ஃபிலிம் சேம்பரில் பயிற்சியை முடித்துக்கொண்ட பலரும் சென்னையிலேயே தங்கி வாய்ப்புத் தேடத் தொடங்கினர். ஆனால் நான் ஊருக்குத் திரும்பிவிட்டேன். உண்மையச் சொன்னால்..., சினிமா என்னோட தேர்வே இல்லை. நான் நடிப்புப் பயிற்சிக்கு வந்ததே நாடகத் துறையில் சாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் காலம் எனக்கு வேறு ஒரு வழியைத் திறந்துவிட்டது. காலம் கடகடவெனக் கடந்து போயிற்று. நானும் சிலபல திரைப்படங்களில் நடித்து கொஞ்சம் பிஸியாகத் தொடங்கினேன். சிவாஜிராவும் ரஜினியாக அவதாரமெடுத்து படங்களில் நடித்துக் கொண்டிருந்ததை பத்திரிகைச் செய்திகள் மூலம் அறிந்தேன். அதன்பின் கேரளத்திலும் அவருடைய படங்கள் திரயிடப்பட்டபோது அவற்றைப் பார்த்தேன். நான் மலையாளத்தில் தட்டுத் தடுமாறி சில படங்கள் நடிப்பதற்கிடையில் ரஜினி வெற்றி நாயகனாகவே மாறியிருந்தார். அதனாலேயே அவரைத் தொடர்பு கொண்டு பாராட்டவோ வாழ்த்துச் சொல்லவோ எனக்குத் தயக்கமாக இருந்தது. என்றாவது ஒருநாள் நேரில் கண்டால் பேசிக் கொள்ளலாமென்று விட்டுவிட்டேன்.

இப்படியிருக்க ஒரு நாள் ஒரு மலையாளப்படத்தின் படப்பிடிப்புக்காக AVM ஸ்டூடியோவுக்குப் போயிருந்தேன். எதேச்சையாக அடுத்த படப்பிடிப்புத் தளத்தை கடந்து செல்லும்போது அங்கே சில கலைஞர்கள் புடைசூழ ரஜினி உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். ஆனாலும் போய்ப் பேச ஒரு தயக்கம்... பேசாமல் கடந்து சென்றேன்.

இதைக் கவனித்த ரஜினி ஓடோடி வந்து கட்டியணைத்தது எனக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. சக கலைஞர்களுக்கும் என்னை அறிமுகப் படுத்தி, எமது ஃபிலிம் சேம்பர் கால அனுபவங்களையெல்லாம் சிலாகித்துப் பேசி மகிழ்ந்தார். அப்போதும் ரஜினி தமிழ் சினிமாவின் முதன்மை நாயகனாக இருந்தார், ஆனாலும் அந்தப் புகழ் வட்டம் அவரில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை.






**குசேலனும் நானும்...**

நான் எழுதிய திரைக் கதைகளில் எனது மனதுக்கு நெருக்கமான ஒரு கதை என்றால் அது "கத பறயும் போள்" என்ற கதை தான். காரணம் எந்தவொரு சினிமாக் கலைஞனுக்கும் தொடர்புபடுத்திக் கொள்ளக்கூடிய ஒரு வாழ்வியல் அதிலிருந்தது. அது என்னுடைய வாழ்க்கை அனுபவமா என பலரும் கேட்டதுண்டு.

ஆனால் அக்கதையில் என்னுடைய வாழ்வனுபவம் ஒரு துளிகூட இல்லை. நான் எந்தவொரு கதையையும் ஒரு அறையிலிருந்துகொண்டு பேப்பர் பேனா வைத்து எழுதியதேயில்லை. பிரயாணங்களின் போதோ, படப்பிடிப்புத் தளங்களிலோ தனிமையிலிருக்கும் போது திடீரெனத் தோன்றும் கற்பனைகளை எனக்குள்ளேயே விவாதித்து முழுமையான திரைக்கதையை உருவாக்கிக் கொள்வேன்.

"கத பறயும் போள்" படத்தினுடைய கதைகூட ஒருமுறை வீட்டில் சமையல் செய்துகொண்டிருக்கும் போது தோன்றிய ஒரு ஐடியா தான். ஆனால் மம்முட்டி போன்ற ஒரு மகா கலைஞன் அக் கதையின் நாயகனாகியதால் அது வெற்றிப்படமாக மாறியது.

சென்னையில் இயக்குனர் பிரியதர்ஷனுடைய preview theatreஇல் விசேட காட்சிகள் ஏற்பாடு செய்திருந்தோம் நானும் போயிருந்தேன். ஒரு நாள் மதியநேரக் காட்சிக்கு நடிகர் ரஜினி வந்திருப்பதாக எனக்கு போன் வந்தது. உடனே நானும் தியேட்டருக்கு விரைந்தேன். படம் பற்றிய அவருடைய அபிப்ராயத்தை தெரிந்துகொள்ள ஆர்வமாக இருந்தது.
ஆனாலும் அவரைத் தொந்தரவு செய்யக்கூடாதென அவர் வெளியே வரும் வழியில் அவரின் கண்ணில்படும் படியாக நின்றிருந்தேன். படம் முடிந்து வெளியே வந்தவர் என்னைக் கண்டதும் ஆனந்தக் கண்ணீருடன் என்னைக் கட்டியணைத்துக் கொண்டார். அந்த இன்ப அதிர்ச்சியை எதிர்கொள்ளத் தெரியாமல் அவர் பேசுவதை மட்டும் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். சிறீனிவாசன் நீங்கள் நல்ல நடிகனென்று தெரியும் ஆனால் உங்களுக்குள் ஒரு நல்ல கதாசிரியன் இருப்பதை நான் அறிந்திருக்கவில்லையெனச் சொன்னார். நான் கூட என்னை நம்பவில்லையெனச் சொல்லிச் சிரித்தேன்.
படம் அவருக்கு ரொம்ப பிடித்திருப்பதாகச் சொன்னார்.
தமிழில் ரீமேக் செய்ய ஆசைப்படுகிறேன் ஆனால் இயக்குனர் சங்கருடைய ஏதோவொரு படத்தில் (சிவாஜி) நடித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார். ஆனால் இந்தப் படத்துக்கு அத்தனை காலம் எடுத்துக்கொள்ளத் தேவையில்லையெனச் சொல்லி அவரை சம்மதிக்கவைத்தேன். வெற்றியோ தோல்வியோ இந்தக் கதையில் அவர் நடிக்க வேண்டுமென்பதில் அவரும் உறுதியாக இருந்தார். சிலவேளை இந்தக்கதையவருடைய கடந்தகால வாழ்க்கையுடன் பொருந்திப் போனதாலாக இருக்கலாம். படப் பிடிப்பு மலையாளத்தைவிடவும் வேகமாக நடந்து திரைக்கும் வந்தது. அந்தப் படம் தான் குசேலன். □




**மென்துணி சுற்றி**
**அத்தனை பக்குவமாக**
**பொத்தியெடுத்து**
**பத்திரப்படுத்துகிறார்கள்,**
**செம்மணி மண் பிரசவித்த**
**மழலையின் எலும்புக் கூட்டை.**

**பிறந்த போது,**
**இதைவிடப் பக்குவமாய்**
**ஏந்தியிருப்பாள் அன்னை.**
**அதனாலிருக்கக் கூடும்**
**புதைக்கும் போதும்**
**அணைத்தபடியே**
**இறந்து போனாள்.**

**சித்துப்பாத்தி இந்துமயான**
**வரலாற்றில்,**
**அன்னையோடு பிள்ளை**
**உடன்கட்டையேறும் வழக்கம்**
**ஒருபோதும் இருந்ததில்லை.**
**பின் எப்படி என்பீர்களானால்**
**அங்கே**
**இராணுவமுகாம் இருந்ததென்பேன்**

**இன்னுமவர்கள் சொல்கிறார்கள்**
**இனவழிப்பு நிகழவேயில்லையாம்**
**இப்படித்தான் எல்லாவற்றையும்**
**சொல்கிறார்கள்.**
**மனச்சாட்சியை மலினத்துக்கு**
**விற்றவர்கள் ஆமோதிக்கிறார்கள்.**






-யூலியஸ் அன்ரனி-

கோடைகால விடுமுறைக்கு எனது தாயூர் சென்று வந்தேன். அங்கு பல பெரியவர்கள் மற்றும் சமூகப் பணியாளர்களை காண முடியவில்லை. சமூகத்தின் வரலாறுகள் தெரிந்த பல பெரியோர் இறந்தும் விட்டார்கள். அவர்களின் திறன்கள், பொதுப்பணிகள், தியாகம், அர்ப்பணிப்பு அனைத்தும் இரண்டாம் மூன்றாம் சந்ததிக்கு தெரியாது இருக்கிறது. அவை பதிவு செய்யப்பட்டு ஆவணப் படுத்தப்பட வேண்டிய முக்கிய விடயங்கள். வரும்கால சந்ததியினர் அறிந்திருக்க வேண்டியது.

ஊரில் உள்ளவர்களிடம் கேட்டால் இறந்த உறவுகளின் வாழ் முறைமைகளை வாய்வழி பகிர்ந்து கொள்ளுகிறார்கள். ஒவ்வொருவரிடமும் பல்வேறு திறன்கள் நிறைந்து கிடந்தன. சிறந்த கூத்து கலைஞர்களாக, நாடகக் கலைஞர்களாக, இசைக் கலைஞர்களாக, விளையாட்டு வீரர்களாக, ஆன்மீகவாதிகளாக, கல்விமான்களாக, சிறந்த தொழிலாளர்களாக வாழ்ந்த பல பெரியோர் மறைந்து போய்விட்டனர். அவர்கள் வாழும்போதே ஊரின் வரலாறுகளை கேட்டு பதிவு செய்யவில்லை என்ற குற்ற உணர்வு எழுந்தது.

இம்முறை சென்ற போது என்னை எப்போதும் ஊரில் வரவேற்று நிற்கும் முக்கிய கலைஞர் நீக்லஸ் பாலச்சந்திரன் என்ற நல்ல சகோதரன் இல்லாமை பெரும் வெறுமையை ஏற்படுத்தியது.

அவர் பல்கலைத் துறைகளின் அறிவைக் கொண்ட கலைஞர். சமூகத் தொண்டன், விளையாட்டு வீரன், கலை நுட்பங்ளைள் நன்கு அறிந்த கலைஞர், ஆன்மீகப் பணியாளன், இலக்கியவாதி, அரசியல் பணி.... இவ்வாறு கூறிக்கொண்டே போகலாம்.











கடல் வளமும் கலை வளமும் நிறைந்த நாவாந்துறை மண்ணில் அவர் 17.06.1952ஆம் நாள் பிறந்தவர். யாழ் நாவாந்துறை றோ.க.பாடசாலையில் கா.பொ.த சாதாரண தரம் வரையில் கல்வி கற்று சிறப்பாக சித்தி அடைந்து பின்னர் தனியார் கல்வி மூலம் வர்த்தகத் துறையில் கல்வி கற்றார். மிகச்சிறு வயதில் தனது தந்தையை இழந்தாலும், தாயாரின் கடின உழைப்பினால் ஊர் போற்றும் சிறந்த பண்பான மனிதனாய் வளர்ந்தார்.

நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயத்தின் பாடகர் குழாத்தில் 11 வயதிலேயே இணைக்கப்பட்டவர். அவ்வூரின் ஆலய நிர்வாக கட்டமைப்பில் இறுக்கமான சட்ட விதிகள் இருப்பினும், சிறுவனாய் இருந்த பாலச்சந்திரனின் சிறந்த குரலினையும், இசை ஆர்வத்தையும் கண்டு அவ்வூர் பெரியவர்கள் அவரை பாடகர் குழாமில் அவரது 11 வயதிலேயே இணைத்துக் கொண்டனர். அப்பணியை அவர் இறக்கும் வரை தன்னை முழுமையாக அர்ப்பணித்து செய்து வந்தார். இறைவனைப் புகழ்ந்து பாடி வந்தார்.
நாவாந்துறை புனித மரியாள் ஆலய திருவிழா (ஆவணி 15) என்றாலே மகிழ்ச்சி தரும் நினைவுகள் என் மனதுள் குவிந்து கிடக்கிறது. அத்திருவிழாவை அப்பங்கு தந்தையர்களோடு இணைந்து அரும்பாடுபட்டு சிறப்பிப்போர் பலருண்டு. அவர்களுள் அமரர் கலைஞர் N.M.பாலசந்திரன் என்ற சகோதரன் குறிப்பிடத் தக்கவர்.

எனக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்து எமது ஊரின் திருவிழா நாட்களில் கலைஞர் N.M. பாலசந்திரன் அவர்கள் விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகளில் முன்னின்று கலந்து கொண்டமை மட்டுமல்லாது, மிக முக்கியமாக ஆலய ஆன்மிக பணிகளில் தன்னை ஆழமாக பதித்து, அர்ப்பணித்து வாழ்ந்தவர். வழிபாடுகள் இறை பக்தியுடன் நடைபெற ஒரு பொது நிலையினனாக பங்காற்றியவர்.

தனது ஆண்மைக் குரலினால் சுருதி சுத்தமாக இனிமையாக பாடும் திறன் கொண்ட இசைக் கலைஞன். பரலோக மாதா பாடகர் குழாமை, இசைக் கருவி மீட்டுபவர்களை சிறப்புற வழிநடத்தும் ஆற்றல் கொண்டவர். நற்கருணை திருவிழா நாளில் (ஆவணி 14) "புகழ்வாய் ஜெருசலேமின் ஆண்டவரை" என்ற பாடலை உயர்த்திய குரலில், வானுயர, இறை பக்தியாய் பாடிவந்தார். அவரது அத்தனிப் பாடல் சிறப்பு மிக்கது. அத்தனை சிறப்பான பக்திக்குரல் அவருக்கு இறைவன் கொடுத்திருந்தார்.

இவ்வாண்டு (2025) அவரில்லாது அவ்வாலய திருவிழாவை முதன்முதலில் பார்த்தேன். அவரது இடம் வெறுமையாக கிடந்தமை மனதை வருடியது.

பாடசாலை நாட்களில் ஆசிரியர் கலைக்கவி நீஎஸ்தாக்கி அவர்களினால் பயிற்றப்பட்டவர். பாடசாலை விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப்போட்டிகள், வில்லுப்பாட்டுக்கள், கிராமியப் பாடல்கள், நாடகங்கள் போன்ற வலயமட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு முன்னிலை வகித்தவர். பாடசாலையின் வெற்றிகளுக்கு இவரின் பங்கும் முக்கியமாகக் கருதப்பட்டது.
நாடகங்களில் அதிக ஆர்வம் கொண்ட சகோதரன் ஷேக்ஸ்பியரின் "Merchnd of Venice" (இரத்தத்துளி) எனும் நாடகத்தில் கதாநாயகியாக நடித்து நாடக மேதை கலையரசு சொர்ணலிங்கம் அவர்களினால் சிறந்த நடிகை என பாராட்டு பெற்றவர்.

1977இல் யாழ் திருமுறை கலாமன்றத்தில் இயக்குனர் நீமரியசேவியர் அடிகளினால் மன்றத்தின் இசைக் குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அடிகளாரின் தயாரிப்பில் உருவான திருப்பாடுகளின் காட்சி நாடகங்களிலும், பாடல்கள் ஒலிப்பதிவுகளிலும், தொலைக்காட்சி நிகழ்வுகளிலும் பிரதான பாடகராக வலம் வந்தவர். யாழ் மறைக்கல்வி நடுநிலைய கத்தோலிக்க நிகழ்வான சிறுவர் உலகம், புதிய உலகம் போன்ற வானொலி நிகழ்வுகளில் பங்காற்றியவர்.

1978இல் நாவாய் புனித மரியாள் ஆலய பங்கு மக்களை ஒருங்கிணைத்து அருட்தந்தை R.M.G.நேசநாயகம்

அடிகளாரின் உதவியுடன் பரபாஸ் திருப்பாடுகளின் காட்சி நாடகத்தினை தயாரித்து இருநூறுக்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு அரங்கேற்றியவர். இக்கலை படைப்பில் மிகச்சிறந்த மூத்த கலைஞர்கள் இவரது இயக்கத்தில் அரங்கேறினார்கள் என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும்.

2004இல் நாவாந்துறையில் பங்கு மக்களை இணைத்து அருட்பணி அமரர் M.X.கருணாரெட்ணம் அடிகளார் தலைமையில் “கல்வாரி கண்ட கடவுள்” எனும் திருப்பாடுகளின் காட்சியினை அரங்கேற்றினார்.
2010ல் மன்னார் புனித செபஸ்தியார் பேராலய பங்கு மக்களுக்காக “கல்வாரியில் கருணை மழை” திருப்பாடுகளின் காட்சி நாடகத்தினை தயாரித்து மேடையேற்றினார்.
அந்நிகழ்விலேயே அதி வணக்கத்துக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகையும், புனித சவேரியார் கல்லூரியும் இணைந்து “தங்க குரலோன்” விருது வழங்கி கௌரவித்தனர்.

2017 நாவாந்துறை புனித மரியாள் ஆலய கலைஞர்களைக் கொண்டு அருட்பணி C.J.அன்ரனிபாலா அடிகளாரின் தலைமையில் “இயேசுவின் பின்னால் பரபாஸ்” திருப்பாடுகளின் பெருங்காட்சி நாடகத்தினை மேடையேற்றினார்.

யாழ் நாவாந்துறை சென்மேரிஸ் உதைப்பந்தாட்ட விளையாட்டு அணியில் வலது முன்கள வீரனாகவும், யாழ் மாவட்ட தேர்வு அணியின் வீரனாகவும் விளையாட்டு மைதானத்திலும் களவீரனாய் திகழ்ந்தவர். மரதன் ஓட்டம், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், வினோதஉடைப் போட்டி போன்ற பல விளையாட்டுகளில் தனது ஊரில் மட்டுமல்லாது யாழ் மாவட்ட ரீதியாகவும் கலந்து கொண்டவர். நாவாந்துறை ஊருக்கு விளையாட்டு துறையில் பெருமை சேர்த்தவர்.

அவர் சிங்கப்பூரில் சிறிது காலம் தொழில் புரிந்து விட்டு ஊருக்கு திரும்பும் போதே சிங்கப்பூரிலிருந்து தனது ஊரின் சென் மேரிஸ் உதைப்பந்தாட்ட அணிக்கு தேவையான புதிய உடைகளை கொண்டு வந்து அணிக்கு அன்பளிப்பு செய்திருந்தமையும், சென் மேரிஸ் அணி அக்காலகட்டத்தில் தொடர்ந்து பல வெற்றி கிண்ணங்களை தட்டிக் கொண்டதும் மறக்க முடியாதது.

தாயக யுத்த காலத்தில் தன்னால் முடிந்தளவு பல துறைகளிலும் விடுதலைப் போரில் பங்கேற்றார். குறிப்பாக கலைத்துறையில் இணைந்து விடுதலைக்காக பெரும் பங்காற்றியவர். சில ஆண்டுகள் தனது குடும்பத்துடன் மன்னாரில் வசித்து வந்தார். அவ்வேளையில் மன்னரிலும் தம்மால் இயன்ற கலைச் சேவையினை ஆற்றியுள்ளார். மன்னார் திருமறைக்கலா மன்றத்துடன் இணைந்தும் பணியாற்றியுள்ளார்.

சமாதான ஒப்பந்த காலத்தில் மீண்டும் தனது ஊராகிய யாழ் நாவாந்துறைக்கு தன் குடும்பத்தையும் அழைத்துச் சென்று, போரினால் உடைந்து கிடந்த ஊரின் நிர்வாகக் கட்டமைப்பை ஊர் வந்து சேர்ந்த ஏனையவருடன் இணைந்து கட்டி எழுப்பினார். நாவாந்துறை சனசமூக நிலையம், கத்தோலிக்க அருட்பணி சபை மட்டுமல்லாது, யாழ் மாநகர சபை போன்றவற்றிலும் தன்னை இணைத்துக் கொண்டு துடிப்போடு பணியாற்றினார். தான் கல்வி கற்ற பாடசாலையின் பெற்றோர், பழைய மாணவர் சங்கத்திலும் இணைந்து கல்வி கற்கும் மாணவர்களின் முன்னேற்றத்துக்காக உழைத்தவர்.

அவர் வாழ்ந்த காலத்தில் திருமறைக்கலை வேந்தன், யாழ் முத்து, கலைக்குரிசில், யாழ் ரத்தினா, திருமறைக் கலாமன்றத்தின் உயர்விருதான கலைஞானபூரன் இன்னும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தினால் “உலகத் தமிழ் மாமணி விருது” புதுச்சேரியில் மாண்புமிகு முதலமைச்சரினால் வழங்கப்பட்டது. இவ்வாறு ஏராளமான விருதுகளைப் பெற்றும், அவர் ஓயாது இறப்பு வரை சமூகப் பணியாற்றி வந்தார்.

புற்றுநோய் என்னும் கொடுமையான நோய் அவரைத் தாக்கியதால் 04.03.2025 இல் இறைபதம் அடைந்தார்.
அவர் தனது பிள்ளைகளுக்கும் தன்னால் இயன்றளவு கலைக் கல்வியினை ஊட்டி விட்டுத்தான் சென்றுள்ளார். அவரது புதல்வியான ஆன்ரினி அன்ரனி அவர்கள் “நாடகத்துறை”யில் கல்விகற்று யாழ் பெண்கள் இந்துக்கல்லூரியில் ஆசிரியையாக பணியாற்றுவதோடு, நாடகப்போட்டிகளில் கலந்து பல விருதுகளையும் வென்று வருகிறார். அவரது மகனான ஜோய் மைக்கல் பாலச்சந்திரன் அவர்கள் இந்தியாவில் இசைத்துறையில் கல்வி கற்று சிறந்த இசைக்கலைஞனாகவும், ஈழத்தில் அரசியல் துறையிலும் பணியாற்றி வருகிறார்.

நோர்வேயில் வாழும் அவரது மகனான தொம்சன் பாலச்சந்திரன் அவர்கள் நோர்வே திருமறைக் கலாமன்றத்தில் நாடக இயக்குனராக துடிப்போடு இயங்கி வருகிறார். இவ்வாறு தனது புத்திரர்களும் தான் சார்ந்த துறைகளில் பணியாற்றிட வேண்டும் என்பது அமரர் நீக்லஸ் பாலச்சந்திரன் அவர்களது பெரும் விருப்பமாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.
அவரின் திடீர் மறைவு, அவரது அன்பான மனைவி, பிள்ளைகள், உறவுகளை மட்டுமல்ல அவரது ஊரையும், மொத்த தமிழ் சமூகத்தினையும், அவர் பணியாற்றிய சகல துறைகளையுமே பாதித்து உள்ளமையினை உணர முடிகிறது.

தமிழ் மேல் காதல் கொண்டு, தமிழுக்காக வாழ்ந்த ஒரு சிறப்பான பண்பான மனிதம் நிறைந்த கலைஞனான அமரர் நீக்லஸ் பாலச்சந்திரன் அவர்களுக்கு தேன் தமிழிதழ் கரம் குவித்து தலைசாய்த்து நிற்கிறது. □

# பாதியில் இறக்கி விட்டுப் போகும் கனவுகள்



மாலினி மாலா



அயலில் ஒரு பெண் மூப்புக் காரணமாக அண்மையில் காலமானார். அவரது மகன் சில வருடங்களின் முன் இறந்து போனார். எஞ்சிய ஒரே மகள் 700கி.மீ தொலைவில் வாழ்கிறார். தாய் இறந்த பின் அவரது மூன்றடுக்கு மாடிகளைக்கொண்ட வீடு பூட்டிக் கிடந்தது.

அவர்கள் வாழ்ந்த காலத்தில் மூன்று அடுக்குகளிலும் பெற்றோர், மகள், மகன் என வாழ்ந்தார்கள். ஒவ்வொரு அடுக்கும் ஒரு குடும்பத்துக்குப் போதுமானதாகவும், அவற்றிற்குரிய அத்தியாவசியத் தளபாடங்களையும் கொண்டிருந்தன. அவரவருக்கு ஆர்வமுடைதும், பிடித்தமானதுமான பொருட்களும் சுவர்களில் படங்களும், பிடித்தமான பூச்சாடிகளும் என வீடு நிறைந்த பொருட்களைக் கொண்டிருந்தது.

ஒவ்வொருவரும் வீட்டைவிட்டுக் குடிபெயரும்போது இந்தப் பொருட்கள் எதையும் அவர்கள் எடுத்துச் செல்லவில்லை. அந்தந்தப்படிக்கே, அப்படியே போட்டது போட்டபடி போய் விட்டார்கள். இப்போது, வீட்டின் இறுதிவாசியான தாயும் இல்லை.

ஒரு காலத்தில் மிகப் பெறுமதியாகத் தோன்றும் பொருட்கள், விடயங்கள் இன்னோர் காலத்தில் சுமக்க முடியாத பாரமாக மாறும்.

தொலைவிலிருந்த மகள் அங்கிருந்தபடியே வீட்டுத்தரகர் மூலமாக வந்த விலைக்கு வீட்டை விற்று விட்டார். வீட்டிலுள்ள பொருட்களை அப்புறப்படுத்தி, வீட்டை வெறுமைப் படுத்துவதற்கும் வாங்கியவருக்குக் கழிவு கொடுக்கப்பட்டிருந்தது.

திறப்பைக் கொடுத்து வெளியேறும் போது இனி வரமாட்டேன் என என்னிடம் விடைபெற்றார். தாம் தனித்துவமாய், சுதந்திரமாய், வாழ்ந்த வாழ்விலிருந்து வெளியேறும் வலி கொடியது. அது சிலவேளை ஞாபகத்துக்காகக் கூட எதையும் பக்குவப் படுத்த விடாது முற்றாக அதிலிருந்து வெளியேறி புதிதாய் உருவாக உந்தும். மகள்காரிக்கும் அதே பிரச்சனை.

இப்போது, வீட்டை வாங்கியவர்கள் வீட்டைத் துடைத்து விடுவது போல அனைத்தையும் அப்புறப்படுத்துகிறார்கள். அந்த வீதி ஒரு குடும்பம் குடியிருந்த வாழ்வின் சின்னங்களால் நிறைந்து கிடக்கிறது.
அவர்களின் தனிப்பட்ட இரசனைகள், தேர்வுகள், சேகரங்கள், சம்பவங்கள் வெற்றிகளின் ஆதாரங்கள் அனைத்தும் குப்பை வண்டிக்காகக் காத்து வீதியில் கிடக்கின்றன.

அதிலிருந்த ஒரு அல்பத்தைத் தூக்கி வந்து இதில் இறந்த பெண் இருக்கிறாரா எனக் கேட்டார் புது உரிமையாளர் என்னிடம்.
பார்த்தேன் ஆல்பம் முழுதும் அவர்கள் கூடி வாழ்ந்த அழகிய வாழ்வின் அடையாளங்கள். இன்னும் சற்று நேரத்தில் குப்பை வண்டி வந்து விடும், அத்துடன் ஒரு வாழ்வின் அடையாளம் முற்றாகக் காடேறிவிடும்.

கலங்கிய கண்களை மறைத்துக்கொண்டு வீட்டுக்குள் வந்தேன். புதிதாக எமது வீட்டுக்கு வாங்க வேண்டும் என மனதில் திட்டமிட்டிருந்த பொருட்களின் பட்டியல் மனதில் கரைந்து கொண்டிருந்தது. □




**இதன் பொருட்டு, இதன் நிமித்தம்**
**அச்சப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்.**
**ஏனெனில்,**
**அதிகாரங்களின் காலடியில் இவர்கள்**
**மண்டியிட்டு, மௌனமாக இருக்கும்வரை**
**கஞ்சாக் கடவுளர்கள் என்றும் கை விடார்.**

நள்ளிரவு பன்னிரண்டுமணிக்கு ஒரு தொலை பேசி அழைப்பு. மன்னாரிலிருந்து கடலோடி நண்பன் பெர்னாண்டோ அழைத்திருந்தான். அவனுக்கு அங்கே பிற்சாமம் மூன்றரை மணியாக இருக்க வேண்டும்.
இந்த நேரம் அவன் கடலுக்குப் புறப்படும் நேரம்.
தொலைபேசியில் வந்தவன் முதல் ஐந்து நிமிடங்கள் என்னைத் திட்டித் தீர்த்தான்.
“கால் ஒப்பிறேசன் முடிச்சுப்போட்டு வந்திருவன் எண்டு போனனி, மூணு மாசத்துக்கு மேலயா ஒரு ரெலிபோன் கிலிபோன்கூட இல்ல.... என்ன தோழா மறந்திட்டியா?
நீ போறப்போ மூத்தவளுக்கு உடம்புக்கு முடியாமல் ஆசுப்பத்திரியில வச்சிருந்தனான்..., வந்து பாத்துப்போட்டுப் போனனி.... புள்ளைக்காவது கோல் பண்ணி என்ன ஏதெண்டு விசாரிச்சியா....? மாமாவிண்ட ஒப்பிறேசன் முடிஞ்சுதா..., மாமா போண் எடுத்தவரா..., இப்ப எப்பிடி சுகமா இருக்கிறாரா... எண்டு புள்ள ஓயாமல் உன்னத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறாள். ஒரு போன்கூட எடுக்கேலாமல்ப் போச்சா தோழா...?”

மௌனமாக இருந்து அவனது பேச்சுக்களை வாங்கிக் கொண்டிருந்தேன். தொடர் திட்டல்களுக்குப்பின் அவனே வழமைக்கு வந்தான்.
“சரி சொல்லு தோழா, ஒப்பிறேசனெல்லாம் முடிஞ்சுதா...., இப்ப எப்பிடியிருக்கு?, எப்ப இங்க வாறாய்?”
சுக நலன்களை சுருக்கமாகச் சொல்லி முடித்துவிட்டு, விரைவில் வருவேன் என்றும் சொன்னேன்.
தொடர்ந்து சுக நலன்கள் விசாரிப்பும், நண்பர்களைப் பற்றிய சேதிகளையும் பரிமாறிக் கொண்டோம்.

“தொழில்துறைகள் எப்பிடிப் போகுது” என்ற எனது கேள்விக்கு சற்று நேரம் அமைதியாயிருந்துவிட்டுச் சொல்லத் தொடங்கினான். பருவகால மாறுபாடுகள் பலவித நோய்களை உண்டுபண்ணுவதோடு கடலிலும் குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. பருவகால மீன்பிடிபாடுகள் வழமைபோல் இல்லை.
ஆனாலும் கடல்வளம் பற்றிய அனுபவங்கள் கொண்ட தொழிலாளர்கள் காலநிலைச் சூழலுக்கேற்ப தொழில்களை மேற்கொள்ளும்போது நல்ல பிடிபாடு நடக்கிறது. காற்றுக் காலங்களில் மேற்கொள்ளப்படும் கரையோர மீன்பிடி திட்டமிட்டு அறவே இல்லாம ஆக்கப் பட்டுள்ளது.

காரணம் கரைகளை அடைத்து அட்டைப் பண்ணைப் பட்டிகள் பெருகிவிட்டன. எந்தக் கரையிலும் கால் வைக்க முடியாமல் அட்டைப்பண்ணை முதலாளிகளின் அடியாட்கள் சண்டபிரசண்டம் என்று முண்டுக்கு வருகிறார்கள். இந்த கஞ்சாமுதலாளிமார் யாரெவர் என்பது இங்கு எல்லோருக்கும் தெரியும். இவர்கள் யாழ்ப்பாணத்தின் உச்சந்தலைக் கரைகளிலிருந்து மன்னார்வரை கஞ்சாக்கொடி கட்டிப் பறக்க விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அட்டை குளிக்கலாமென ஒருவாரம் சிலாபத்துறை போய் நின்றேன். ஒருகாலத்தில் தோணி நிறைந்த அட்டைகளை அள்ளித்தந்த அல்லிராணிக்கோட்டைக் கடலில்தான் இப்போதெல்லாம் ஒன்றிரண்டு அட்டைகளையாவது குளிக்க முடியும். ஆனால் அந்தக் கடலிலும் இறங்க முடியாது. உள்ளூர் மாபியாக்களின் அட்டூழியம்.





இந்த நாசமறுப்பார் கடத்திக் கொண்டுவரும் இந்தக் கேரளகக்ஞ்சாப் பொதிகளை இந்த இடங்களில்தான் நங்கூரம்கட்டி கடலுக்கடியில் பதுக்கி, GPS அடித்து வைத்திருக்கிறார்கள்.

இந்த ஏரியாவுக்குள் அட்டை குளிக்க விடாமல் துரத்தியடிக்கிறார்கள். போதாக்குறைக்கு இப்போ அட்டைப் பண்ணைகளில்தான் கஞ்சாப் பொதிகளைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள். நடுக்கலில் நங்கூரமிட்டு வைப்பதில் பாதுகாப்பு மிகமிகக் குறைவும், ஆபத்தும் ஆனால், கடலட்டைப் பண்ணைகள் கஞ்சாக் கடத்தலுக்குப் பெரும் பாதுகாப்பு. அட்டைப்பண்ணைக் காவல் என்ற பெயரில் பட்டிகளுக்குள் பதுக்கி வைத்திருக்கும் கஞ்சாவுக்குக் காவலிருக்கிறார்கள்.

அட்டைப் பண்ணைகளுக்கான அரச அனுமதிப் பத்திரம் என்ற பெயரில் கஞ்சாப் பொதிகளுக்கு அரச அனுமதியோடு காவலிருக்கிறார்கள். இப்போ இங்கே நூற்றுக்கணக்கான பண்ணைகளில் அட்டைகளே இல்லாமல் வெறும் பட்டிகள்தான் காணப் படுகின்றன. ஆனால் காவல் கொட்டில்களில் தினமும் காவலாளிகள் நிறைவெறியில் காணப்படுகிறார்கள். தவிர, இரவுகளில் மற்றப்படியான கூத்துக்களும் நடக்கின்றன.......

இந்தப் பயன்பாடற்ற வெற்றுப் பண்ணைகள் ஏன் கடல்களை அடைத்து நிற்கின்றன என்று கேட்பதற்கும் இங்கு எந்தக் கடற்தொழிற் சங்கத்துக்கும் வல்லமை இல்லை. சங்கங்களில் இருக்கும் தலைமைகளில் பெரும்பாலானோர் அட்டைப்பண்ணை முதலாளிகளின் எடுபிடிகள்தான். யாழ்பண்ணைக் கடலில் பரம்பரை பரம்பரையாக களங்கண்டி தொழில் செய்தவர்களிடமிருந்து அந்தப் பாடுகளை இரண்டு வருடம், மூன்று வருடம் என குத்தகைக்கு எடுத்த அட்டைப் பண்ணை முதலாளிமார் இப்போது குத்தகைக்காலம் முடிந்த பிற்பாடும் அவற்றைத் திரும்பக் கொடுக்காமல் இழுத்தடிக்கிறார்கள். அன்றாடங்காய்ச்சி களங்கண்டித் தொழிலாளர்கள் எங்கேதான் போவார்கள்.

பண்ணைகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கிய பிரதேசசபை அதிகாரிகள், அந்தப் பண்ணைகள் எல்லாவற்றிலும் அட்டை வளர்க்கப் படுகிறதா எனக் கண்காணிக்கிறார்களா என்ன..., இல்லையே. தவிரவும், கைவிடப்பட்ட பண்ணைகளின் எச்சங்கள் தீவகத்திலிருந்து மன்னார்வரை கடலுக்குள்ளேயே கிடக்கின்றன. இவற்றை அகற்றி, கடல்வளத்தைக் காக்கவேண்டும் என்ற கரிசனை கொஞ்சம்கூட அரசுக்கோ, அதிகாரிகளுக்கோ இல்லை. அனுமதிப் பத்திரங்களை அள்ளி வழங்கிய இந்த அதிகாரிகளைத்தான் கடலில் இறக்கி இவற்றை சுத்தப்படுத்த விடவேண்டும். அப்போதுதான் தெரியும் கடல் எவ்வளவு கனமானது என்றும், கடலிலோ கால் வைத்தால் எப்படி மூச்சு முட்டும் என்றும்.

நேற்று உனது தீவகக் கடலுக்குள் 150கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஐந்துபேரைக் கடற்படை பிடித்துள்ளது. அவர்கள் பலநாள்த் திருடர்கள். இப்போதான் அகப்பட்டார்கள். அகப்பட்டவர்கள் வெறும் வாலுகள்தான். தலைகளும், தலைக்கும் தலைகளும் மிகப் பவுத்திரமாக, சுதந்திரமாக இருக்கிறார்கள். இதுபோக, ஆள்கடலுக்குத் தூண்டிவலைக்குப் போவதாக கோஸ்பவர் அதிகமான மோட்டர் போட்டுகளை வைத்து இந்திய இழுவைப் படகுகளிலிருந்து ஐஸ் மாதிரியான போதைப் பொருட்களை பெருமீன்களின் வயிற்றுக்குள் அடைத்துவைத்துக் கடத்துகிறார்கள். இவை மன்னாரிலும் நடக்கிறது, வடகடல் கரைகளிலும் நடக்கிறது, தீவகத்திலும் தாராளமாகவே நடக்கிறது. தோழா..., முக்கியமாக, தீவகக் கடலுக்குள்ளும், யாழ்தென்பகுதிக் கடலுக்குள்ளும் தொழில் செய்ய 15கோர்ஸ் பவர் மோட்டரே போதுமானது. ஆனால், 25, 40 கோஸ் பவர் மோட்டர்கள் பாவிக்க வேண்டிய தேவையே இல்லை. இந்த மோட்டர்களைப் பாவிப்பதானால் கஞ்சாக் கடத்தலுக்கு மட்டும்தான் பயன்படுத்த முடியும். இது வடபகுதி கடற்தொழில் சங்கங்கள் அனைத்துக்குமே தெரியும். அப்படியிருந்தும் இந்தப் பெரிய கோர்ஸ்பவர் மோட்டர்களை ஏன் இந்தச் சங்கங்கள் பதிவு செய்கின்றன. விளங்குதா தோழா உனக்கு?!

முப்பது வெள்ளிக் காசுக்கு ஆசைப்பட்டு சொந்த நண்பனே ஆண்டவரைக் காட்டிக் கொடுத்ததுபோல், கடலின் சொந்த மக்களாலேயே கடல் காட்டிக் கொடுக்கப் படுகிறது. உனது ஊரிலும் ஐம்பது அறுபது பண்ணைகள் வரப்போவதாக அறிந்தேன். உனது ஊர்த் தொழிலாளர்களைக் கவனமாக இருக்கச்சொல். திண்டவன் தின்ன, கோம்பை சூப்பினவன் தண்டமிறுத்த கதையாக மொத்த ஊரார் மீதும் கஞ்சாக் கடத்தல் குற்றப் பரம்பரை என்ற களங்கம் வந்துவிடும்."

இப்படி நிறையவே விபரங்களோடு இன்னொரு அதிர்ச்சியான தகவலையும் சொன்னான் பெர்னாண்டோ.

“தோழா..., உனக்கு அந்தனி குருசை நினைவிருக்குத்தானே, நீ இங்கு வந்தபோது நம்மோடு கடலுக்கு வந்தான். அவன் போனகிழமை இறந்து போனான்..”

“ஏன்..., என்னாச்சு...? அவன் கலியாணங் கட்டி ஏழெட்டு மாசந்தானே... அந்தப் புள்ள பிள்ளைத்தாச்சியெல்லா தோழா? என்ன நடந்தது...?”

“நாய் கடிச்சுச் செத்துப்போனான். இரவுத்தொழில் முடித்து கரைக்கு வந்தவனை நாலைந்து தெருநாய்கள் உருட்டியுருட்டிக் கடித்ததாம். இந்தத் தெரு நாய்களை நாடு-முழுவதும் ஏன் தான் அரசாங்கம் விட்டு வைத்திருக்கிறதோ தெரியாது. நாட்டில் மக்கள் வாழ்வதற்கு அச்சுறுத்தலாக இருக்குமாக இருந்தால் அவைகளை அழிக்க வேண்டியதுதானே தோழா...? நாய்ப்பிரியர்கள் தங்களுக்குத் தேவையான நாய்களை வீட்டில் கட்டிவைத்தோ, நடுவீட்டுக்குள் வைத்தோ வளர்க்கலாம்தானே....? நீயே சொல்லு தோழா, நீங்கள் வாழும் நாடுகளில் எங்காவது தெருநாய்கள் இருக்கின்றனவா...? இல்லையே. தெருநாய்களைக் கொல்லவேண்டாம் என ஜீவகாருண்யம் கதைப்பவர்கள் கடைகளில் விற்கும் எலிமருந்து, மூட்டைப்பூச்சி மருந்து, கொசுத்திரி, கிருமிநாசினி போன்றவையும் விற்கக்கூடாது என்று போராடலாம்தானே...? எலியும், கொசுவும், மூட்டைப்பூச்சியும், கரப்பொத்தானும், தோட்டத்துப் பூச்சிபுழுக்களும் உயிரில்லையா தோழா..? என்ன கண்டறியாத பாசாங்கும், நியாயமும். ஆடு, மாடு, கோழி, மீன் தின்னாமலா இருக்கினம்..?
வண்ணம் வடிவமாகப் பட்டுச்சேலைகள் உடுத்தாமலா இருக்கினம்..? அந்தக் கோடிகோடியான பட்டுப் பூச்சிகளின் உயிர்கள்..., உயிர்களில்லையா...? மிருதங்கம், தவில், உடுக்கு, பறை என தோல்களெல்லாம் சும்மா வந்த சீதேவிகளா...? ஜீவகாருண்யத்தைக் கழுத்தறுத்த வாத்தியங்கள்தானே தோழா...?! இவர்களின் நந்திதேவனின் மத்தளத்துக்கு எங்கிருந்து வந்தது தோல்...? சிவனின் அம்மணம் மறைக்கை கொல்லாமல் வந்ததா புலித்தோல்..? சொல்லு தோழா...”

அவனது அடுக்கடுக்கான கேள்விகள் எதற்கும் என்னால் எந்தவித பதிலும் சொல்ல முடியவில்லை.

இறுதியாகக் கேட்டான், “சரி தோழா..., இந்த நாய்ப் பிரச்சனை கிடக்கட்டும். அதை தெருநாய்களும், வீட்டு நாய்களும் பார்த்துக் கொள்ளட்டும்.... இந்தக் கடல்களையும் கரைகளையும் வைத்து நடக்கும் அட்டூழியங்களுக்கு ஏதாவது செய்யவேண்டும். என்ன செய்யலாமென்று சொல் தோழா?” என்று.

இதற்கு, இப்போதைக்கு அவனுக்கு நான் சொல்லக்கூடிய பதில் ஒன்றே ஒன்றுதான். அதையே சொன்னேன். “புள்ளகுட்டிக்காறன் நீ, பேசாமலிரு” என்பதுதான்.

“நீயா இப்படிச் சொல்கிறாய் தோழா...?” எனக் கேட்டான்.

“என்னைப் பொறுத்தவரை சொல்லக்கூடியளவு எல்லாத் தரப்புக்கும் சொல்லியாகி விட்டது. இனி சொல்வதற்கு எதுவுமில்லை. நீ இப்போ சொன்ன தகவல்களை வெளியில் சொல்லப் போவாயானால்..., அரசாங்க அபிவிருத்தித் திட்டங்களுக்கு விரோதமாகப் பிரச்சாரம் செய்கிறாய் என்று உன்னைத்தான் உள்ளே தூக்கிப் போடுவார்கள். ஏனென்றல் இன்றைய அதிகாரத்தின் டிசைன் அப்படி. எனவே இப்போதைக்கு வாயை இறுக்கி மூடிக்கொண்டு பேசாமலிரு” என்றேன்.

“என்ன தோழா..., நீயே இப்பிடிச் சொன்னால்...? மனிதர்கள் உயிர் வாழ்வதற்கான, சுவாசிப்பதற்கான ஒட்ஷிசனை கடலும், கடல் தாவரங்களும்தான் நமக்குத் தருகிறது என்று எமக்கு வகுப்பெடுத்த நீ இப்படிப் பொறுப்பில்லாமல்





கதைக்கலாமா தோழா...?!”

“நான் இப்போ இப்படித்தான் சொல்ல முடியும் தோழா”
“இங்கு வா தோழா, நேரில் சந்தித்து நிறையவே சொல்கிறேன், அதைவிட நிறையவே காண்பிக்கிறேன்”

எல்லாம் போச்சு.... இனிமேல் யாழ்ப்பாணம், மன்னார் கடற் பிரதேசங்களையும், வளங்களையும், எங்கட சனங்களையும் அந்தப் பாலைதீவு அந்தோனியார் இறங்கிவந்து மீண்டும் மீன்களுக்குப் பிரசங்கம் வைத்தாலும் காப்பாற்ற முடியாது. கடலில் மீன்கள் இருந்தால்தானே பிரசங்கம் வைப்பதற்கு.




கண்டல்முனையின் படுவான் பனங்கூடலுக்குள் சூரியன் தன்னை முழுவதுமாக தலைமறைவாக்கிக் கொண்டது. மெல்லமெல்ல மின்மினிப் பூச்சிகள் சதிராடுவதுபோல கவிராடியபடி பெருக்கெடுக்கிறது கடல். நீர்மட்டம் குறைந்து தரவையாகக் காணப்பட்ட புறவாய் களக்கடலின் நிலத்தின் கடற்தாவரங்களான அறுகுகளும் தாளைகளும், கடற்பட்டு ஆர்க்குகளும் மீண்டும் கடற்பெருக்கின் வருகையால் தலை நிமிரத் தொடங்கின.

தங்கள் தீவனத்தை வேட்டையாடும் நேரம் இதுவே ஆகையால் மீன்கள் கரையை நோக்கி நகரத் தொடங்கின. இன்னும் கொஞ்ச நேரத்தில் கண்டல்முனை புறவாய் களக்கடல் முட்டித் ததும்ப நீர்மட்டம் பெருக்கெடுத்துவிடும்.

சாட்டிப் பாறையின் சுற்றாடலில் வாழ்பவை, ஆமைப்பார் அயலட்டத்தில் வாழ்பவை, நாகபாறைப் பள்ளத்தாக்கில் வந்து போகிறவை, பட்டசாட்டாமாற்றுத் தோப்புக்குள் குடியிருப்பவை, கழிமுகத்துக்குள் உலாத்துபவை, சீராண்டாம்பார் குகைக்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவை, பல்லதீவு ஆற்றுவாயில் பருவகாலத் தரிப்புக்கு வந்துபோகின்றவை என, இவைகள் எல்லாவற்றுக்குமான தீவனத்தை உள்ளங்கைக்குள் பொத்தினாற்போல் வைத்திருக்கும் கடல்தான் கண்டல்முனையின் நீட்சியாய் தென் திசையில் அமைந்துள்ள புறவாய் பரவைக்கடல். எல்லாப் பருவ காலங்களிலும் மீனவர்களை ஏமாற்றாமல் மடியளவு, கையளவேனும் மறுதலையின்றிக் கொடுத்தனுப்பும் தாய்மனம் கொண்ட கடல். பெரிய பிரித்தானிய ராபர்ட் பாக் நீரிணை, வங்காளவிரிகுடா என பெருஞ் சமுத்திரங்களோடு தூரத்துச் சொந்தம் மட்டுமே கொண்ட கடல் நீரேரி இது.

இப்போது இந்தக் கடற்பகுதிக்குத்தான் மீண்டும் சோதனை காலமானது எல்லை தாண்டிய முண்டன்சுறா உருவில் வந்தமைந்திருக்கிறது.

முண்டன்.
மஞ்சள்ச் சமுத்திரத்தை ஆட்சி செய்யும் முண்டஞ்சுறாக்கள். உலகச் சமுத்திர வரைபடத்திலுள்ள எல்லாக் கடல்களுக்குள்ளும் எந்தவித கேள்வி நியாயமும் இல்லாமல் அத்துமீறும் வல்லாதிக்க உயிரி. எந்த எல்லைகளைத் தாண்டவும், கண்ணில் அகப்படும் எல்லாவற்றையும் சிதறடிக்கவும், வாயில்ப் போடவும் வல்லமை பொருந்திய ஆழி ட்றாகன்கள். பூமியில் மனிதர்கள் தோன்றும்போதே முண்டன் சுறாக்கள் தோன்றியதாகவும், மனிதர்கள் தோன்ற முன்னமே இவை கடலில் தோன்றிய உயிரி-னம் என்பதாகவும் கதைகள் சொல்லப்படுவதுண்டு. இன்னும்சில கதைகளோ... "தீவனம் தேடி கடலில் இறங்கிய மனிதன் நீரின்கீழ் நீண்டநேரம் மூச்சடக்கப் பழகியதால், அப்படியே கடல்உயிரியாக பரிணாமம் அடைந்து முண்டன் சுறா இனமாக மாறினான்" என்றும் சொல்லப் படுவதுண்டு. இது கற்பனையாக இருந்தாலும், கேட்பதற்கு சுவாரஷ்யமாகத்தான் இருக்கிறது. கையிலகப்படும் எல்லாவற்றையுமே அழித்தொழிக்கும் மனித குணம் கொண்டதால் இந்தக் கதை உண்மையாக இருக்கக்கூடுமோ எனவும் எண்ணத் தோன்றும்.

சிதறடிக்கப்படும் தீவுகளின் பொருட்டும், தாய்வழிக் கடலின் பொருட்டும் எங்களது தீர்க்கதரிசிகளின் வாக்குகள் வழமை போலத்தானே அண்மைக்காலமாகப் பொய்த்துப் போனவை ஆகின. காலநிலை தவறிய காற்றமுத்தங்களும், கடலலைகள் குமுறி எழுவதும், எழுந்தோடி வரும் பேரலைகள் கரைகளைத் தாண்டிப் புகுந்து குடியிருப்புக்களை அச்சப் படுத்துவதுமாக நாட்கள் நகர்கின்றன. போதாக்குறைக்கு இப்போ முண்டனும் கடல்நீரேரிகளுக்குள் எல்லைமீறி வரத் தொடங்கி விட்டது. கடந்த காலங்களிலும் அவ்வப்போது இப்படி முண்டன்களின் அத்துமீறல் நிகழ்வது வழமைதான். ஆனால் இப்போது அத்துமீறிய முண்டன் அகோரமாக வேட்டையாடுகின்றது.

கூட்டமாய் வந்து உட்புகும் சுறாக்களை எதிர்கொண்டு

வேட்டையாட முடியும் ஆனால் இப்படித் தனியனாய் வெறிபிடித்து எல்லைமீறி வரும் முண்டன்கள் மோசமானவை. கூட்டமாக உலவும் சுறாக்கள் பசித்தவேளை மட்டுமே தமக்குத் தேவையானவற்றை வேட்டையாடும் அலியன் முண்டன்கள் அப்படியல்ல, சகட்டுமேனிக்கு அடித்துக்கொண்டே போகும்.

எண்பதுகளுக்கு முன்னான காலங்களில் எங்கள் ஊர்களிலெல்லாம் உள்ளூர்ச் சண்டியர்களென ஆங்காங்கே இருந்தார்கள்தான். யுத்தநாட்களில் எல்லா இயக்கங்களும் இப்படியான சண்டியர்களை விசாரணை விளக்கம் என எதுவுமே இல்லாமல் கம்பங்களில் தொங்க விட்டார்கள். சனங்களுமோ..., இயக்கங்கள் செய்தால் அதெல்லாஞ் சரிதான் என எதிர்க்கேள்விகள் எதுவுமே இல்லாமற் கடந்து போனார்கள். ஆனால் இப்போ.... யுத்தம் முடிந்தபின்னால் உள்ளூர்ச் சண்டியர்களென ஊர்களெல்லாம் நிறைந்து காணப் படுபவர்கள் யாரென்றால்..., அரச அதிகாரிகள்தான். குறிப்பாக தமிழ்ப்பிரதேசங்களில் அரச அதிகாரிகள் இயக்கப் பண்பாடு, பாரம்பரியத்தில் அற நனைந்தவர்களாகவே இருக்கிறார்கள். பச்சையாகச் சொல்லப்போனால்..., மன நோயாளிகளின் கைகளில் அதிகாரங்களைக் கொடுத்துவிட்டு, மக்கள் அல்லோலகல்லோலப் படுகிறார்கள். சாதாரண பொறுப்புகளிலிருக்கும் அதிகாரி-களும் தங்களை சிற்றரசர்களாகவும், பேரரசர்களாகவும், செகன்ஷாக்களாகவுமே நினைத்து அட்டூழியம் செய்கிறார்கள். இவர்களுக்கு ஒரு சங்கதி விளங்கவில்லை...., இவர்கள் உருவேற்றப்பட்ட இயக்கக் கம்மாலையில்தான் மக்களும் உருவேற்றப் பட்டார்கள் என்பது.

“யார் யார் நண்பர்கள், யார் யார் எதிரிகள்” என கிஞ்சித்தும் சிந்திக்கத் தெரியாத இயக்கப் பண்பாட்டுக்குள்தான் இன்றைய தமிழ் அதிகாரிகளும் பொறுக்கியெடுக்கப் பட்டார்கள், அதே பண்பாட்டுக்குள் வாழ்ந்து பழக்கப்பட்ட மக்கள்தான் இன்றும் இந்த அதிகாரங்களின் கைகளில் ஒப்படைக்கப் பட்டுள்ளாகள் என்பது தேசத்தின் மிகப்பெரும் சாபக்கேடு.

அத்துமீறும் முண்டன்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் இந்த விலைப்பட்டுப்போன தொண்டன்களைப் பற்றி நாம் அதிகம் பேசத் தேவையில்லை. உள்ளூர்ச் சண்டியர்களைப் பற்றிய உதாரணத்துக்காகத்தான் இவர்களைத் தொட்டோம். இல்லையெனில் இவர்களைத் தொடவேண்டிய தேவையே நமக்கு இல்லை.

உள்ளூர்ச் சண்டியன்களான கருங்கண்ணிகளையே ஓடஓட விரட்டிப்பிடித்து குதறியெறியும் பிராந்தியச் சண்டியனாக அத்துமீறி எல்லைக்குள் வந்து பரிநாசம் செய்து திரிந்தது இந்துசமுத்திரத்தின் ஒற்றை முண்டன்சுறா.

இதற்குத் தெரிந்ததெல்லாம்..., அவ்வப்போது கண்ணில் அகப்படும் எல்லாவற்றையுமே அடித்து வாயில் போடுவதுதான். காலகாலமாய் அதற்கென்றே பழக்கப்பட்ட முண்டன் சுறாக்கள்.

முண்டன் கண்கடை தெரியாமல் அடித்துப்போட்ட கருங்கண்ணிகளின் சிதைந்த உடல்கள் தினமும் கண்டல்த்துறையின் கரைகளெல்லாம் ஊதி ஒதுங்கின. அளவுக்கதிகமான தீனி கிடைத்ததென உள்ளூர்க் காகங்களெல்லாம் கூட்டம் கூட்டமாய்க் கரைநீளம் கத்தித் திரிந்தன. ஆனால் சனங்களோ ஒருநேரத் தீவனத்துக்கும் வகையற்று குடாக்கடலை ஏக்கத்தோடு நோக்கியபடி கரையில் காத்துக் கிடந்தனர். மாதக்கணக்காக தோணிகள் நங்கூரம் தூக்கப் படாமல் கரையிலேயே கட்டுப்பட்டுக் கிடந்தன. இந்த அச்சங்களையும் பயங்காட்டல்களையும் ஏறி மிதித்துக் கொண்டுதான் கப்பித்தான் பிலிப்பன் பேதுரு அம்மான் களமிறங்கினார்.

தாய் தடுத்தாள், ஊரான ஊர் தடுத்தது, உறவுகள் தடுத்தன, கலக்கமும் கலகமுமான கசிந்த கண்களுடன் மச்சாள்மார் தடுத்தார்கள், ஊருக்குத் தலைச்சனான அண்ணாவியார் தடுத்தார், சங்கிறிஸ்தாம் தடுத்தார், பாதிரியார் தடுத்தார், பரியாரியார் தடுத்தார். எதற்கும் யாருக்கும் மசியவில்லை கப்பித்தான் பிலிப்பன் பேதுரு அம்மான். பரம்பரை பரம்பரையாகக் காமேந்து பண்ணிவந்த, எறிகணைப் பொழிவுகளின்போது ஏதிலிகளாக ஓடுமிடமெல்லாம் கைவிடமல் காவிக்கொண்டு திரிந்த “கடற்பட்டுக் கம்பான் கயிற்றை” இடுப்பில் கட்டிக்கொண்டும், சாந்தமரியா என்ற ஒருமரப்படகில் மூன்று எறிமண்டாக்களை அணியக்குட்டைக்குள் ஏற்றிக்கொண்டும் மிடுக்குடன் களமிறங்கினார் கப்பித்தான் பிலிப்பன் பேதுரு அம்மான்.

யுத்தகளமுனைப் பராக்கிரமங்கள் அத்தனையும் வாய்ந்த ஒரு போராளியைச் சுமக்கும் கெப்பேறுடன் கப்பித்தான் பிலிப்பன் பேதுரு அம்மானைச் சுமந்துகொண்டு சாந்தமரியா புறப்படத் தயாரானாள். போர்க்களம் பலகண்ட சண்டைக்குதிரையின் வலுவுடன் சாந்தமரியாப் படகு கப்பித்தான் பிலிப்பன் பேதுரு அம்மானின் திறவுப்பிரகாரம் தென்திசை நோக்கிப் பாய ஆயத்தமாக நின்றாள்.

சாந்தமரியா அவ்வளவு இலேசுப்பட்டவளில்லை. கப்பித்தான் வகையாறக்களின் ஆறேழு தலைமுறைகளைக் கண்டவள். கப்பித்தான் பிலிப்பன் பேதுரு அம்மானின் பூட்டனார் அருளப்பன் பினாங்கு பாய்க்கலில் கொண்டுவந்து சேர்த்த ஒருமரத் தோணி. சுறா வேட்டைக்குத் தோதாகவும், பலமாகவும் மின்னியாவளவு பருத்த வேம்பின் கொங்கைகளில் வங்குகள் செதுக்கிப் பொருத்திய தோணி. சாந்தமரியா கடலோடும் சமயங்களில் அணியத்தில் நின்று திறவு சொல்வதற்கென்று பெரும் திறமைகள் வேண்டும். காற்றைக்கொண்டும், கடலலைகள் எழுவதையும் விழுவதையும் கொண்டும், வெள்ளிகளை, முகில்களை, பறவை ஒலிகளை, நாவில் எச்சில் ஊறுவதைக் கொண்டும், மஞ்சவெண்ணா, இசங்கு மரங்களின் வாசனை நாசியில் தொடுவதைக் கொண்டும் காலநிலை கணிக்கத் திராணியுடைய தண்டையல்கள் அணியத்தில் ஏறிநிற்க அத்தனை தகுதியும் கொண்ட கலம்.

யுத்தகால நிலவரங்களால் ஏற்பட்ட மாற்றங்களால் தேசத்தின் எல்லாத்தரப்பு மக்களின் இருத்தல் சிதிலமாகியதுபோல கடலோடிகளின் வாழ்வும் சிதறடிக்கப்பட்டது. கரையோரப் பாறைகளில் விதைக்கப்பட்ட காரல் மீன்கள் வெயிலில் பொரிந்து கருகியதுபோல கடலோடிகளின் அழகிய வாழ்வும் கருகி உருக்குலைந்துபோய்க் கிடந்தது.

இப்போ கடல் நீரமட்டம் உயர்ந்து காணப்பட்டது. இந்த நேரத்தில் அதிகமான பாரையும் பாலையும் கயலும் முரலும் தீனி தேடி கொக்குக்குடாக் கொச்சத்துக்குள் திரளாக வரும். அவற்றை வேட்டையாட நிச்சயம் முண்டன் அங்கேதான் வரும் என்பதைக் கணக்குப் போட்டுக் கொண்டார் அம்மான். சாந்தமரியாவில் ஏறி நங்கூரத்தைத் தூக்கும்போது ஓடிவந்து தானும் கடையாலில் ஏறிக்கொண்டாள் மரியம் மகிறம்மா.

(கப்பித்தானின் வேட்டை அடுத்த இதழிலும் தொடரும்) ☐

## இந்த இதழின் அட்டைப்படக் குறிப்பு:




-தமயந்தி-

வடபகுதி கரையோரக் கடல்களில் அமைக்கப்பட்டுவரும் கடலட்டைப் பண்ணைகளால் சுற்றுப்புறச்சூழலுக்கும், இயற்கை வளங்களுக்கும், கடற் பொருளாதாரத்துக்கும் என ஏராளமான பாதகங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. அவற்றில் ஒன்று எமது கடல்வளங்களில் மிகச் சிறப்பானதாகவும், முக்கியமானதாகவும் கருதப்படும் கடற்தாவரங்களாகும்.


வடபகுதிக் கடற்பிரதேசங்கள் பெருமளவில் களக்கடல்களாக இருப்பதால் சூரியவெப்பம் கடலடி நிலப்பரப்பை எளிதாகத் தொட்டு விடுகின்றது.

இதன் காரணமாக எமது கடற்பரப்பில் மிகமிக நிறைவாகவே தாவரங்களின் வளர்ச்சி பரந்து காணப் படுகின்றது. இது எமது தேசத்துக்கு இயற்கை அள்ளித் தந்த பெருங் கொடைதான். இத்தகைய பெருமதிப்புள்ள இயற்கை வளங்களை என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்ற கேள்வியை ஒருகணமாவது நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். இயற்கையின் உணவுச் சங்கிலியை சிதைக்கிறோம். அட்டைப் பண்ணைளுக்குள் அகப்படும் கடற்தாவரங்கள் மிகக் குறிகிய காலத்திலேயே அழுகி அழிந்து விடுகின்றன.

மீன்களின் உணவுப் பதார்த்தங்களைத் தாங்கி நிற்கும் தாழைகள்



சுதந்திரமான கடற்தாழைகள்



காரணம், கடற்தாவரங்களில் இருக்கும் பூச்சி புழுக்களை கடற்குதிரைகள், நீர்ப்பாம்புகள், மீனினங்கள் போன்றவை பிடித்து உணவாக்கிக் கொள்வதால் பூச்சி புழுக்களிடமிருந்து தாவரங்கள் தப்பித்து விடுகின்றன.
கடற்பரப்பையும் பசுமையாக வைத்திருப்பதோடு, மீனினங்களின் வருகைக்குக் காரணமாகவும் விளங்குகின்றன. தவிர, மனிதர்கள் சுவாசித்து உயிர் வாழ்வதற்கான பெரும்பகுதி

அட்டைப் பண்ணைக்குள் அகப்பட்டு அழுகிச் செத்துக் கொண்டிருக்கும் தாழைகள்



ஒக்ஸிஷனை கடற்தாவரங்களே கொடையாகத் தருகின்றன. இத்தகைய..., மனிதர்கள் உயிர் வாழ்வதற்கான இயற்கைத் தாவரங்களை கண்களை மூடிக்கொண்டு, அபிவிருத்தி என்ற பெயரால் அழித்து வருகின்றோம்.

இவ்விதழின் அட்டைப் படத்திலுள்ள படம் கடந்த ஆண்டு வடபகுதியில் கடலட்டைப் பண்ணை அமைத்துள்ள பகுதியில் எடுக்கப்பட்டது. இந்தப் பண்ணை அமைத்த ஒரு வாரத்திலேயே இதற்குள் அகப்பட்டுள்ள கடற்தாழைகளும், நிலப் புற்களும் எப்படி கருகத் தொடங்கி விட்டன என்பதற்கு சாட்சியங்கயாகும்.

அட்டைப்பட்டிகளுக்குள் அடைபட்டு அழுகும் கடற்தாழைகள்







Dr. Yaseer Arafath

கற்குடா, மட்டுநகர் - படம்: தமயந்தி

உலகில் நீளமான கடற்கரை இலங்கையில் உள்ளது. ஆனால் அதை நாங்கள் அறியாத மடைமையில் இருக்கிறோம். ஒரு வேளை இந்தக் கடற்கரை முழுவதும் சிறுபான்மை மக்கள் இருப்பதால் இதன் அற்புதமான நிலத்தொடர்ச்சியான இயற்கைக் கடற்கரைகளை அடக்கி வைத்திருக்கப் பார்க்கிறார்களோ தெரியவில்லை. உச்சிமுனை கடற்கரை, கல்பிட்டி கடற்கரை, கண்டல்குடா கடற்கரை, ஆலங்குடா கடற்கரை, மாம்புரி கடற்கரை, கரம்பை கடற்கரை, தொடுவா கடற்கரை, உடப்பு கடற்கரை, சிலாபம் கடற்கரை என்று பிரித்து பார்க்கிறோம் ஆனால் இந்த அனைத்து கடற்கரைகளும் நிலத்தொடர்ச்சியான மிக நீண்ட மணல் கடற்கரைகள் என்று நாங்கள் யோசிப்பதில்லை.



உண்மையில் இலங்கையின் Florida மற்றும் Miami Beach என்று நாம் பெருமை கொள்ளக்கூடிய இடம் இந்த கற்பிட்டி தீபகற்பம் மிகவும் சிறந்த தொன்மையான வரலாற்று கருவூலங்கள் நிறைந்த பிரதேசம்.




நிலத்தொடர்ச்சியான உலகில் நீளமான கடற்கரை பங்காளாதேஷ் Cox Bazar கடற்கரை. இது 120கிலோமீட்டர் அடுத்தது நியூசிலாந்து 88கிலோமீட்டர் கடற்கரை என்று தான் அனைத்து தகவல்களும் சொல்கின்றன. ஆனாலும் Cox Bazar beach சாதாரணமாக Googleஇல் பார்க்கவே பல இடங்களில் ஆறுகள் கடலோடு கலக்கின்றன, அத்தோடு பல இடங்களில் மணலே இல்லாமல் கிடக்கின்றன. அத்தோடு பல இடங்களில் மீன்பிடித் துறைமுகங்கள்



பாசிக்குடா, மட்டுநகர் - படம்: தமயந்தி

அமைக்கப்பட்டுள்ளன. கப்பல் உடைக்கும் இடங்களும் உள்ளன.

ஆனால் இலங்கையில் புத்தளம்மாவட்டத்தில் சிலாபம் தெதுறு ஓயா முகத்துவாரத்தில் இருந்து கற்பிட்டி உச்சிமுனை வரை இருக்கும் தனியே வெண்மையான மணல் நூறு மீட்டர்களை விட அதிகமாகவும் உச்சி முனையில் பல கிலோமீட்டர் அகலமும் கொண்ட நீண்ட கற்பிட்டி தீபகற்பம் மற்றும், தொடர்ச்சியான இயற்கை Beach முத்துபோல இணைந்த சிலாபம், முந்தல், புத்தளம் களப்புகள் இடையில் இருக்கும் பல சிறிய உவர்நீர் களப்புகள் காரணமாக இருபக்க நீரும் களப்புகளில் கலக்க 100 கிலோமீட்டர் நீளத்திற்கு நிலத்தொடர்ச்சியான இயற்கை Beach ஒன்று காணப்படுகிறது.

இது நியூசிலாந்தின் 88 கிலோமீட்டர் பீச்சை விட நீளமானது அதேவேளை Cox Bazar beachஇன் geographic continuity Google maps இலேயே challenge செய்ய முடியும். இலங்கை அரசாங்கம் இது தொடர்பாக ஆராய்ந்து சர்வதேச கவனத்தை புத்தளம் பெருங் கடற்கரை (Great Beach of Puttalam) நோக்கி உலகின் நிலத்தொடர்ச்சியான இயற்கை அழகான மணல் நிறைந்த தூய்மையான கடற்கரையாக, World Longest Sandy Beachஆக பிரபலப்படுத்த வேண்டும். சரி, Cox Bazar தொடர்ந்து முதலாவது நீளமான கடற்கரை என்று வைத்தால் கூட நியூசிலாந்து கடற்கரையை விட 12 கிலோமீட்டர் Great Beach of Puttalam கூடுதலாக இருக்கிறது. எனவே தற்போதைக்கு கூட உலகில் இரண்டாவது நீளமான கடற்கரை இதுதான். ஆனால் இவற்றை பற்றி நாம் சிந்திக்கவோ, சுற்றுலாவா தலமாக சர்வதேச மயப்படுத்தவோ இல்லை.
கல்பிட்டி தீவுகளை இணைத்து Kalpitiya Integrated tourism project சரியான முறையில் marketing செய்யாமலே தோல்வியடைய விடப்பட்டது. இலங்கையில் உல்லாசப் பயணிகள் எண்ணிக்கை விரைவாக வளர்ந்து வரும் நிலையில் supply demand mismatch விரைவில் வரும் அதற்காக புதிய இடங்களை அடையாளம் காணவேண்டும்.

பல ஐரோப்பிய நாடுகளில் Over tourism உல்லாசப் பயணிகள் எண்ணிக்கை அவற்றின் capacity யை விட அதிகரித்து Tourism Tax போட்டு உல்லாசப் பயணிகள் எண்ணிக்கையை மட்டுப் படுத்தி வருகின்றனர்.

எனவே இலங்கை உலகின் நீளமான கட்கரைக்கு வாருங்கள், உலகில் மிக நீளமான பெரிய உயிரினம் Blue Whale அத்தோடு டொல்பின் மரைன் மம்மல்ஸ் மற்றும் யானையை அதன் எல்லைகளில் காணுங்கள். வேண்டும் என்றால் இதற்கு Blue Whale Beach என்றாவது பெயர் வைத்து பிரபல்யம் ஆக்குங்கள்.

Kalpitiya Kite festival சிறந்த விடயம் அதன் மேலதிகமாக இதற்கு Dakar Rally போல Sandy beach ride beach wagon மோட்டார் பந்தயம் அல்லது Beach Marathon, Sprint, Decathlon போன்ற போட்டிகள் அத்தோடு சீனாவின் Dragon boat போன்ற போட்டிகள் இங்கு அழகாக நேர்த்தியாக செய்ய வேண்டும்.
இலங்கையில் எதிர்காலம் உல்லாசப் பயணிகள் வருகையிலேயே இருக்கிறது. □




“**விருத்தப் பாமழை ஆயிரம்**” என்ற கவிதை நூல் அறிமுக நிகழ்வு நோர்வே பேர்கன் தமிழ்ச் சங்கத்தால் கடந்த 23.08.2025 அன்று மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வின் தலைமையுரையை தமிழ்ச்சங்க தலைவர் திருவாளர் பிளேவியஸ் அவர்கள் ஆற்றியிருந்தார். இந்நிகழ்வில் செல்வி ப. பவுஸ்ரினா இறை வணக்கப் பாடலை இசைத்தார்.

அருட்தந்தை றெனே பீஸ்மன் அறிமுக உரையை ஆற்றினார். திருவாளர் சுகந்தன் சிவநேசன், செல்வி கத்லின் றிச்மண்ட், பேராசிரியர் வே. தயாளன் ஆகியோர் நூலைப்பற்றிய விமர்சன உரையை மிகச் சிறப்பாக நிகழ்த்தி இருந்தார்கள். நூலின் பதிப்பிலிருந்த பல கவிதைகளை உடைத்து, கவிதைகள் கூறும் கருத்துக்களை தமது பார்வையில் பொழிப்புரை வழங்கினர். அது மட்டுமல்லாது அருட்பணி செபமாலை அன்புராசா அவர்களது சமூக, ஆன்மிக, கலை, இலக்கியப் பணிகள் பற்றியும் விரிவுரைத்தனர்.

அருட்தந்தை ப.விமல்ராஜன் அவர்கள் கவிதைகள் பற்றிய ஆய்வுரையை ஆற்றி இருந்தார்.

நூல் அறிமுக நிகழ்ச்சியை திருவாளர் யூலியஸ் அன்ரனி அவர்கள் தொகுத்து வழங்கினார்.

புலம்பெயர் மண்ணிலே தமிழ் மொழியின்பால் கொண்டிருக்கின்ற ஆர்வத்தைக் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. தமிழ்மொழியை வளர்க்க வேண்டும், தமிழ் மொழி வளர்வதால், தமிழ் பேசும் மக்களாகிய நம் வாழ்வியல் உயரும் என்பதில் புலம்பெயர் தமிழ்மக்கள் எவ்வளவு துணிச்சலோடு பல்வேறுபட்ட முயற்சிகளை





பல்மொழி பேசுகின்ற பல்பண்பாட்டுச் சூழலில் முன்னெடுத்து வருகிறார்கள் என்பதையும் நேரடியாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

நம்முடைய மொழி வாழுகிறபோதுதான் நாம் சிறப்பாக வாழமுடியும் என்பதைக் கண்டுகொள்கிறபோது நம்முடைய வாழ்வு சிறக்கும், நம்முடைய வாழ்வியல் உயரும் என்பதை புரிந்துகொண்டு நம்முடைய தொடர் முயற்சிகளிலே ஈடுபடுவோம்.

மிகச் சிறப்பாக இந்நிகழ்வு இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**(படங்கள்: யோ. யசிந்தன்)**

முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் வெளியீடாக வந்திருக்கும் செ.அன்புராசா அடிகளாரின் “**விருத்தப் பாமழை ஆயிரம்**” என்னும் புதிய கவிதைநூல்
முதல் வணக்கமாக (6 கவிதைகள்), எல்லாம் வல்லவராக (11 கவிதைகள்), வண்மொழி (9கவிதைகள்),
சமயம் சரியாக (7 கவிதைகள்), குடும்பம் கோயிலாக (10 கவிதைகள்), வளரும் பயிராக ( 8 கவிதைகள்),
மாதர் மதிப்பாக (5 கவிதைகள்), 8. நான் நலமாக (28 கவிதைகள்), 9. சமூகம் குணமாக (39 கவிதைகள்),
இயற்கை சீராக (29 கவிதைகள்), வாழ்க்கை வளமாக (46 கவிதைகள்), வாசிப்பை நேசிக்க (8 கவிதைகள்), முன்மாதிரியாக (14 கவிதைகள்), இருட்டில் நடந்தவையாக (24 கவிதைகள்), அரசியலாக (19 கவிதைகள்),
துறைசார்ந்தோராக (7 கவிதைகள்), பலதும் பத்துமாக (16 கவிதைகள்), கொரோனா குன்றிப்போக (5 கவிதைகள்), வேண்டுதலாக (42 கவிதைகள்), நிறைவாக (2 கவிதைகள்)
என்பதாக இருபது தலையங்கங்களின் கீழ் 335 கவிதைகள். இந்த 335கவிதைகளும் ஆயிரம் விருத்தப் பாக்களால் அலங்காரமாகப் பாடப் பட்டுள்ளன. அவற்றிலிருந்து இரண்டு கவிதைகள் தேன் தமிழிதழ் வாசகர்களுக்காக.




## நாட்டைக் கெடுக்கும் நஞ்சு

*நாட்டில் உள்ள சிலபேர்*
*நான்கு காசு சேர்த்திடவே*
*மோட்டு வேலை செய்து*
*மொக்குத் தனமாய் நடக்கின்றார்!*
*ஆட்டம் போட்டுத் திரிந்து*
*அவலங் களையே புரிகின்றார்!*
*சேட்டை விடுக்கும் செயலை*
*சீராய் ஆக்க வேண்டுமன்றோ!*

*போதைப் பொருளை விற்றுப்*
*பொருளைச் சேர்க்கும் மக்களிவர்!*
*பேதை மனிதர் இவரைப்*
*பெருகிச் செல்ல விடலாமா?*
*பாதை மாறிச் சென்றால்*
*பலரும் மடிந்து போய்விடுவர்!*
*வாதை தொடரும் முன்னர்*
*வாழ்வை மாற்றத் துணிவோமே!*

*நாட்டைக் கெடுக்கும் இந்த*
*நஞ்சை ஒழித்துக் கட்டிடுவோம்!*
*கூட்டாய் முயன்றே ஒன்றாய்*
*கொடுக்கை உடைத்துப் போட்டிடுவோம்!*
*வீட்டை அணுக விடாது*
*விழிப்பாய் இருந்து செயற்படுவோம்!*
*சாட்டை அடிகள் கொடுத்துத்*
*தவற்றை முற்றும் நீக்கிடுவோம்!*

## தமிழ்த்தூதர் தனிநாயகம்

ஈழமண் பெற்றெடுத்த
இணையிலாத் தமிழின் தூதர்!
ஆழமாய் மொழியை ஆய்ந்தே
அறிஞராய்த் திகழ்ந்தந் நாளில்
ஏளனமாக நம்மை
எதிர்த்தவர் தமக்கு முன்னாய்
கோழையாய் நின்றி டாது
கொலுவிலே ஏற்றி வைத்தார்!

அருள்பணி புரிந்துகொண்டே
ஆய்வுகள் நடத்தி வைத்தே
அருந்தமிழ் மொழிக்குச் சேவை
ஆற்றிய செயலைக் கண்டு
திருப்பணி யாகக் கொண்டு
தீந்தமிழ் வளரச் செய்து
விருப்புடன் தமிழைக் கற்று
வெளிச்சமாய் ஒளிர்ந்து நின்றார்

நாடுகள் சுற்றி வந்தும்
நற்றமிழ் வாசம் வீச
ஏடுகள் புரட்டிப் பார்த்தும்
ஏற்றமா நாடும் வைத்தும்
கோடுகள் தாண்டிச் சென்று
கொடுமைகள் எதிர்த்து நின்றும்
பாடுகள் சுமந்து வாழ்ந்தும்
பைந்தமிழ் வளர்த்து யர்ந்தார்




# Jeg leker ute i hagen

**நான் எனது தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறேன்**

Lenea
4 år (4 வயது)

